MC.16/2025

23.09.2025

PW1 – Rosey W/o.Suresh Babu, Age-30

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 04.00 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 04.15 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 23.09.2025

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது).

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :-

உங்கள் கணவர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் விபரங்கள் படித்து பார்த்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கும் ஓராண்டுக்கு முன்னர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி ஹச் எம் ஓ பி வழக்கு எண். 23 /2021 தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கில் உங்கள் கணவரை விட்டு நீங்களே தன்னிச்சையாக பிரிந்து சென்றதால் விவாகரத்து கோரி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் உங்களுக்கு எதிராக வழக்கோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்போ கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நீங்கள் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவாகரத்து வழக்கில் உங்களுக்கு திருமண பந்தத்தை தாண்டி வேறொரு நபரான தாயனூரை சார்ந்த குடிமான் சின்னப்பையன் குமாரர் ரமேஷ் என்பவருடன் உறவு

வைத்திருந்த காரணத்தினால் உங்கள் கணவர் நீங்கள் கோரும் விவாகாரத்து பரிகாரத்திற்கு சம்மதம் என்று தெரிவித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விவாகரத்து வழக்கில் ஜீவனாம்சம் தொகை எதுவும் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். கடந்த 25.01.2023 அன்று திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கில் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையேயான திருமணம் ரத்து செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.12.2020 அன்று உங்கள் கணவர் உங்களுக்கு திருமணத்திற்கு அப்பாற்பட்ட ரமேஷ் என்பவருடன் இருக்கும் காரணத்தினால் உங்கள் இரு குழந்தைகளையும் ஒப்படைக்கும் படி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. புகார் ஏற்பு மனு எண் 25/2020 என்ற வழக்கில் உங்களை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மற்றும் மூன்றாம் மனுதாரர்களை தன் பெற்றோர்கள் உதவியுடன் உங்கள் கணவர் பராமரித்து வர தயாராக உள்ளார் எனவும் மேற்படி இரண்டு குழந்தைகளும் உங்களிடம் இருந்தால் நீங்கள் சரியாக வளர்க்க மாட்டீர்கள் எனவும் குழந்தைகளை உங்கள் கணவருடன் அனுப்பி வைக்க தயாராக உள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவரின் வேலை வருமானம் குறித்து எவ்வித ஆவணமும் நீங்கள் நீதிமன்றத்தின் தாக்கம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் விவாகரத்துக்கு முன்பும் பின்பும் ரமேஷ் என்பவர் உடன் வாழ்ந்து வரும் காரணத்தினால் குழந்தைகளை உங்கள் பராமரிப்பில் விட்டால் சரியாக வராது என்று உங்கள் கணவர் குழந்தைகளை

தன் பராமரிப்பு கோருகிறார் என்று சொன்னால் சரி அல்ல. குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் வழங்குவதற்கு பதில் குழந்தைகளை தன் பாதுகாப்பில் பெற்று பராமரித்து வர தயாராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விவாகரத்து வழக்கில் என்னுடைய தவறுகையினால் நான் பிரிந்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு விவாகரத்து கொடுப்பதில் சம்மதம் என்றால் சரி என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.